- - [illegible]

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082411

1. District மாவட்டம்: பெரம்பலூர் PS: காவல்நிலையம்: V & AC. பெரம்பலூர் Year: ஆண்டு: 2023 FIR No.: மு.த.அ. எண்: 04/2023 Date: நாள்: 12.9.23

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:
 (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Sec: 7.
 (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
 (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 08.9.23 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
 Time Period : நேர அளவு சுமார் 11.50 hrs (8 [illegible]) Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 11.9.2023
 (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.9.2023 Time நேரம் 06.00 hrs.
 (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.9.2023 Time நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், அகரம் சீகூர் கிராமம். சுமார் 25km வடகிழக்கு
 Beat Number முறைக் காவல் எண் (b) Address : முகவரி
 (c) In case outside limit of this Police Station, then the Name of P S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. R. ராமகிருஷ்ணன் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் [illegible]. ராமலிங்கம் (லேட்)
 (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு வயது 37/2023 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
 Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
 (f) Occupation : தொழில் (g) Address : முகவரி No 170, தெற்கு வீதி, திட்டக்குடி கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
 திரு. மாரிராஜ், கிராம நிர்வாக அலுவலர், அகரம் சீகூர் கிராமம், பெரம்பலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
 —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவைப்படின் தனித்தாளில் இணைக்கவும்)

மனுச் சுருக்கப்பட்டது:
இன்று 12.9.2023 ம் தேதி காலை சுமார் 06.00 மணிக்கு
ஊர்க் காவல் மற்றும் கண்காணிப்பு பணி, பெரம்பலூர்
காவல் ஆய்வாளர் T. கிருஷ்ணன் ஆகிய நான் அலுவலகத்தில்
இருந்த போது திரு. M.R. ராமலிங்கம், 37வயது, S/o ரெங்கசாமி. கிராமம்.
மங்கலம், திட்டக்குடி என்பவர் நேரில் ஆஜராகி எழுத்து மூலம்
கொடுத்த புகாரைப் பெற்றேன். புகாரின் தன்மையையும்
புகார்தாரர், எதிர் மனுதாரர் ஆகியோரிடம் புகாரின் உண்மைத் தன்மை
பற்றி விசாரணை மேற்கொண்டேன். அந்த
புகார் மனுவின் சாராம்சம் பின்வருமாறு.

(தனி தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken: Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை: மேலே தந்த முறைப்பாட்டின் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளர் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

முதல் குற்றமுறைப்பாட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் நகல் இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பாட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இடுகைப் பதிவு

T. K [signature] 12/9/2023
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
12.9.2023.
9.20hrs.

Name பெயர் கிருஷ்ணன்
Rank நிலை காவல் ஆய்வாளர், No எண்
VVAC, பெரம்பலூர்
12/9/2023

அனுப்புனர் M.R.ராமகிருஷ்ணன், 37 வயது S/o முத்து.இராமலிங்கம் (லேட்), 170, தெற்கு வீதி, திட்டக்குடி, கடலூர் மாவட்டம்-60106. பெறுனர்: ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பெரம்பலூர். அம்மா நான் என் மனைவி குழந்தைகளுடன் திட்டக்குடியில் வசித்து வருகிறேன். நான் B.Tech படித்துவிட்டு செல் போன் கடை வைத்து உள்ளேன். நாம் தமிழர் கட்சி திட்டக்குடி சட்டமன்ற தொகுதியின் தலைவராக இருக்கிறேன். எனது அப்பா அகரம்சீகூர் கிராமத்தில் (பெரம்பலூர் மாவட்டம்) சர்வே எண் 82/9A -ல் பட்டா எண் 1584 ல், 64 செண்ட் விவசாய நிலம் 2002-ம் வருடம் வாங்கி இருந்தார். 2013-ம் வருடம் எனது அப்பா இறந்த பின் அதே வருடத்தில் உரிய வாரிசு சான்றிதழ் பெற்று இந்த இடமானது எனக்கும் மற்ற வாரிசு தாரர்களுக்கும் மேல சொன்ன பட்டா எண் படி கூட்டு பட்டாவாக பெறப்பட்டது. எனது அம்மா ஜெகதாம்பாள் எனது அக்காமார்கள் ஜெயலட்சுமி, விஜயா, அன்பரசி, அம்பிகா, மற்றும் இறந்துபோன எனது அண்ணன் ஜெயராமன் மகன்கள் ராஜாராம், ஸ்ரீராம் உட்பட நானும் எனது அப்பாவின் வாரிசு தாரர்கள் ஆவோம். 2021-ம் வருடம் ஆவண எண் 3935/2021, படி இந்த இடமானது எனது பெயருக்கு மற்ற வாரிசு தாரர்கள் கிரயம் செய்து கொடுத்தனர். 2022ம் ஆண்டு June ம் மாதம் இந்த 64-செண்ட் (26 ares ) அளந்து அத்து காட்டும்படி சர்வேயர் பணம் கட்டியதில் இன்று வரை எந்த நடவடிக்கையும் இல்லாததால் கடந்த 14/6/-2023 ம் தேதி தாசில்தார் குன்னம் அவர்களுக்கு முகவரியிட்டு அகரம்சீகூர் கிராமத்தில் உள்ள எனக்கு சொந்தமான 64 செண்ட் நிலத்தை Sub- division செய்து எனது பெயருக்கு தனிபட்டா மாற்றம் செய்து கொடுக்க ஆன்லைனில் விண்ணப்பம் செய்து ருபாய் 800 கட்டணம் செலுத்தினேன். அதன் தொடர்சியாக அகரம் சீகூர் சர்வேயரை தொடர்பு கொண்டதில் நிலத்தை அளக்காமல் காலதாமதம் ஆனாதால் 7/9/2023- தேதி நான் குன்னம் தாலுக்கா அலுவலகம் சென்று Head Surveyor நேரில் பார்த்து கேட்டதில் அவர் விசாரித்துவிட்டு எனது மனுவானது தனிபட்டா பெயர் மாற்றத்திற்காக கிராம நிர்வாக அலுவலர் அகரம் சீகூர் கிராமம் அவர்களின் Login-காகிற்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பபட்டுள்ளது என்றும், அவரை நேரில் சென்று பார்க்குமாறு தெரிவித்தார். அன்று போய் பார்த்ததில் VAO- இல்லாததால் மறுநாள் 8/9/2023 தேதி அன்று நான் அகரம் சீகூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்ற போது VAO- இல்லாததால் ஏற்கனவே தாலுக்கா ஆபிஸ்-ல் இருந்து கிடைக்கபெற்ற VAO- அகரம் சீகூர் திரு.பிரகாஷ் அவர்களின் செல்போனிற்கு 8667453051 சுமார் 11.50 மணிக்கு தொடர்பு கொண்ட போது உடனே சில நிமிடங்களில் VAO- அவரது அலுவலகம் வந்து என்னை சந்தித்தார். நான் ஏற்கனவே ஆன்லைனில் பதிவு செய்த மனு மற்றும் ஆவணங்களை (பட்டா, கிரயம் பத்திரம்,

ஆதார் கார்ட், வாரிசு சான்றிதழ், பணம் செலுத்திய நகல்கள்) கொடுத்ததில் பார்த்துவிட்டு பத்திரத்தின் அசல், E.C ஆகியவற்றை எடுத்து கொண்டு தன்னை நேரில் பார்க்கும் படியும் பட்டா பெயர் மாற்றம் செய்ய செலவும் ஆகும் என்றும் ரூபாய் 3000 தனக்கு தனியாக தர வேண்டும் என்றும் கேட்டார். ரூபாய் 3000-ம் லஞ்சப் பணமா என நான் கேட்டபோது, பட்டா பெயர் மாற்றத்திற்கு வழக்கமாக வாங்கும் பணம்தான் என்று சொன்னார். அதோடு நான் லஞ்சம் கொடுப்பது எனது கொள்கைக்கு விரோதமானது என்பதால் சென்றுவிட்டேன். மறுநாள் VAO விடம் பேசி அவர் மனதை மாற்றலாம் என்று எண்ணி அவருக்கு போனில் பேசியபோது மீண்டும் VAO ரூபாய் 3000 தனக்கு லஞ்சமாக கேட்டார். நான் விவசாய நிலம் தானே வீடு பிளாட் இல்லையே என்று கேட்டபோது கூட 1-2 சென்ட் இடத்திற்கே இவ்வளவு பணம் ஆகும், உங்களுடையது பெரிய நிலம் என்றும் திட்டக்குடியில் கூட இதை விட அதிகமாகத்தான் பணம் வாங்குகிறார்கள் என்றும் தனது முடிவை மாற்றாமல் என்னிடம் லஞ்சம் கேட்டார். மீண்டும் நான் பணத்தை குறைத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டபோதும் கூட பணத்தோடு வாருங்கள் என்றும் 12/9/23 தேதி தன்னை வந்து பார்க்குமாறும் தெரிவித்தார். அரசு அலுவலராகிய அகரம் சீகூர் VAO ஆகிய பிரகாஷ் அவர்கள் அரசு வேலையை செய்து முடிக்க தனக்கு ஆதாயம் பெரும் நோக்கில் என்னிடம் ரூபாய் 3000-ம் லஞ்சம் கேட்டார் என்னிடம் ரூபாய் 2500 மட்டுமே உள்ளது. மேலும் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் அனைத்து ஆவணங்களும் ( E.C, அசல் பத்திரம் ) சரியாக இருந்தும் தனிபட்டா பெயர் மாற்றம் செய்ய என்னிடம் லஞ்சம் கேட்ட அகரம் சீகூர் VAO மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கோரி இன்று 12/9/23 தேதி இந்த புகார் கொடுத்தேன். உரிய நடவடிக்கை எடுக்கவும். இப்படிக்கு SD(***)M.R.ராமகிருஷ்ணன்.12/9/2023. Sir, Received this Complaint from the Complainant on 12.09.2023 at 06.00 hrs. Verified it's genuiness through sources and registered a case in V& AC, Perambalur Detachement Crime No04/2023 U/S 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 12.9.2023 at 08.30 hrs. SD(****) T.Rameswari 12/9/23 (T.Rameswari) Inspector of Police V& AC, Perambalur. I am submitting the original F.I.R along with the complaint to the Hon'ble court of the chief judicial Magistrate/ Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned officials.

T.R. 12/9/23
T. Rameswari
Inspector of Police
V&AC, Perambalur.